2016 ஆகஸ்ட் 8]

ஆணையிட்டிருக்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொல்லியிருக்கின்ற அந்தக் குக்கிராமத்தில் உள்ள மின்மாற்றியில் மின் பளு அதிகமாக இருக்குமேயானால், அதுபற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

32—

மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

***1704—திருமதி எஸ். விஜயதரணி:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சி, மூவோட்டுக்கோணம் மற்றும் மேல்பாலை பகுதிகளில் ஒரு இலட்சம் லிட்டர் கொள்ளளவுள்ள மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சியில் உள்ள மூவோட்டுக்கோணம் மற்றும் மேல்பாலை பகுதிகளில் வாழும் மக்களுக்கு, தலா 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட இரண்டு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகளின்மூலம் போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டுவருவதால், மேற்கூறிய இடங்களில் புதியதாக 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டுவதற்குத் தேவை எழவில்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விளவங்கோடு சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட இடைக்கோடு பேரூராட்சி, மூவோட்டுக்கோணம் பகுதியைச் சுற்றியுள்ள 16, 17 வார்டுகளைச் சேர்ந்த குக்கிராமங்களில் மேரிக்கோடு, கைதக்குழி, காரைக்காடு, பொத்தை, பாலச்சல், அம்பேற்றின்காலை போன்ற பகுதிகளில் ஐந்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் வசித்துவருகிறார்கள். அவர்களுக்கு போதுமான தண்ணீர் வழங்க முடியாத சூழ்நிலை இருந்துவருகிறது. இவர்கள் எல்லோருக்கும் சேர்த்து இன்னும் அதிகமான நீர் தேவை இருக்கிறது. எனவே, ஆழ்துளைக் கிணறு அமைத்து, 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலம் சுத்திகரிக்கப்பட்ட தண்ணீரை இந்தப் பேரூராட்சியில் வழங்குவதற்கு ஆவன செய்ய வேண்டும்.

அதேபோல, குழித்துறை நகராட்சிக்குட்பட்ட பல்வேறு வார்டுகளிலும் மற்றும் 3-வது வார்டு, கழுவந்தட்டு, ஆர்.சி. தெரு, தாலுகா அலுவலகம் பின்புறம் போன்ற பல்வேறு பகுதிகளிலும் சுத்தமான குடிநீர் கிடைக்கப்பெறாத சூழ்நிலை உள்ளது. அதேபோல, குழித்துறை நகராட்சி எல்லையில் இருக்கும் நல்லூர், உண்ணாமலைக்கடை பேரூராட்சிப் பகுதிகளிலும் கலங்கிய தண்ணீர் வந்துகொண்டிருக்கிறது. ஒரு வாரத்திற்கு ஒரு நாள் அல்லது 2 நாட்கள் மட்டுமே தண்ணீர் வருகிறது. எனவே, குழித்துறை நகராட்சியில் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் எல்லா வார்டுகளுக்கும், அனைத்துப் பகுதிகளுக்கும் வழங்கப்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி, கேள்வியைக் கேளுங்கள். நீங்கள் அனுபவம் வாய்ந்த உறுப்பினர். ஏற்கெனவே experience பெற்ற உறுப்பினர். கேள்வி நேரத்தில் இப்படியா கேள்விகளைக் கேட்பீர்கள்? ஒரு கேள்வியைக் கேளுங்கள்.

திருமதி எஸ். விஜயதரணி: எனவே, குழித்துறை நகராட்சிக்கும், அதன் எல்லைப் பகுதிகளுக்கும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வழங்கவும், குழித்துறை, தாமிரபரணி ஆற்றில் கூட்டுக் குடிநீர்த் திட்டம் செயல்படுத்தவும் அரசு முன்வருமா என்பதைத் தங்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சரிடம் அறிய விரும்புகிறேன்.

2016 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டம், இடைக்கோடு பேரூராட்சிக்குட்பட்ட மூவோட்டுக்கோணம் பகுதியில் சுமார் 1,200 பேர் வசித்துவருகின்றனர். இவர்களுக்கு இடைக்கோடு–பளுகல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் வாயிலாக இப்பகுதியில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலமும், இரண்டு சிறு மின்விசைத் திட்டங்கள்மூலமும் போதிய அளவில், நாள் ஒன்றுக்கு நபர் ஒருவருக்கு 80 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது.*

அதேபோல, இப்பேரூராட்சியில் அமைந்துள்ள மேல்பாலை பகுதியில் சுமார் 800 பேர் வசித்துவருகின்றனர். இவர்களுக்கு களியக்காவிளை–கொல்லங்கோடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தின் மூலமாக கல்லான்பாறை பகுதியில் அமைந்துள்ள 60,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிமூலமும், நான்கு சிறு மின்விசைத் திட்டங்கள்மூலமும் நாள் ஒன்றுக்கு, நபர் ஒருவருக்கு 80 லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டுவருகிறது. இடைக்கோடு பேரூராட்சியில் அமைந்துள்ள மூவோட்டுக்கோணம் மற்றும் மேல்பாலைப் பகுதிகளில் வாழும் மக்களுக்குப் போதுமான அளவில் குடிநீர் வழங்கப்பட்டுவருவதால், இப்பகுதிகளில் புதியதாக மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் கட்ட வேண்டிய அவசியம் எதுவும் எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, குழித்துறை நகராட்சி, உண்ணாமலை பேரூராட்சி போன்ற பகுதிகளிலெல்லாம் குடிநீர்ப் பிரச்சினை இருப்பதால், குடிநீர் வழங்க வேண்டும் என்றும் கேட்டார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எங்குமே குடிநீர்ப் பிரச்சினை கிடையாது; போதிய அளவு குடிநீர் வழங்கப்படுகிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்கள் ரூ.169 கோடியில் அந்த மாவட்டத்திற்கு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அறிவித்துள்ளார்கள். இத்திட்டத்தில் குழித்துறை நகராட்சியும் இடம்பெறக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. அங்கு விடுபட்டிருக்கக்கூடிய பகுதிகளையெல்லாம் சேர்ப்பதற்காகத்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்த நடவடிக்கையை

எடுத்துள்ளார்கள். கூடியவிரைவிலே அந்தத் திட்டமும் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், அந்தப் பேரூராட்சியில் போதுமான இடமும் இல்லாத சூழ்நிலை இருக்கிறது. எனவே, அவசியம் இருப்பின், இதுகுறித்து மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். விஜயதரணி அவர்கள்.*

முற்பகல் 10—20

திருமதி எஸ். விஜயதரணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல, பாகோடு வெள்ளாங்கோடு கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு ஆய்வு நடத்தப்பட்டு, இடவசதி இல்லாத காரணத்தால், அந்தத் திட்டம் கிடப்பில் போடப்பட்டிருக்கிறது. தற்போது, பாகோடு பனைவெல்லம் கூட்டுறவுச் சங்கத்திற்குட்பட்ட 552/1B சர்வே எண்ணில் இடம் தயாராக உள்ளது. அந்த பனைவெல்லம் society-யும் தற்போது நலிந்த சூழ்நிலையில் உள்ளது. எனவே, இந்த இடத்தைப் பயன்படுத்தி, ஒரு கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை அந்தப் பகுதிக்குக் கொண்டுவர தாங்கள் ஆவன செய்ய வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். அதுபோன்று, களியல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலும் பழங்குடி மக்களுடைய கிராமங்கள் இணைக்கப்படாமல் இருக்கின்றன. குறிப்பாக, கோதையாறு, மோதரமலை, சிலோன் காலனி, கோலஞ்சிமடம், வட்டப்பாறை, குருத்தமலை, கீழமன்னடி, மேலமன்னடி போன்ற பகுதிகளெல்லாம் இதில் இணைக்கப்பட வேண்டும். ஆகையால், அந்தக் கிராமங்களையும் இணைத்து இந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தைச் செம்மையாக பழங்குடி மக்களுக்குக் கொண்டு சேர்க்க வேண்டும் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு அமர்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

2016 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரூராட்சியிலே ஒரு* society-*யினுடைய இடம் இருப்பதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியுள்ளார்கள். அந்த இடத்தையும் ஆய்வு செய்து, அப்படி இடம் இருந்தால், தண்ணீர் தேவை இருந்தால், அங்கே குடிநீர் தொட்டி கட்டுவதற்கு கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும். அதேபோல, இன்றைக்குக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திலே மலைவாழ் மக்கள் எல்லாம் சேர்க்கப்பட வேண்டும் என்று சொன்னார்கள். எந்தக் கூட்டுக் குடிநீர்த் திட்டத்தை ஆய்வுக்கு எடுத்துக்கொண்டாலும், அங்கே எந்தெந்தப் பகுதிக்கு, எந்தெந்தக் கிராமத்திற்கு, எந்தெந்த பேரூராட்சிக்கு தண்ணீர் தேவை; தண்ணீர் நல்ல முறையில் வழங்கப்படுகிறதா; ஏதாவது கூடுதலான அளவு தேவை இருக்கிறதா என்பது ஆய்வு செய்யப்படும். அந்த வகையில், பேரூராட்சிப் பகுதிகளில் ஒரு நபருக்கு 70* LPD *கொடுக்க வேண்டும். அதேபோல், இன்றைக்கு நகராட்சி, மாநகராட்சிப் பகுதிகளில் எல்லாம், பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லாவிடில், 90* LPD, *இருந்தால் 135* LPD *கொடுக்க வேண்டும். இவற்றையெல்லாம் ஆய்வு செய்து, தண்ணீர் கிடைக்காதபட்சத்தில், அந்தக் கிராமங்கள் எல்லாம் அந்தத் திட்டத்திலே சேர்க்கப்படும். அப்படி ஏதேனும் பகுதிகள் விடுபட்டிருந்தால், கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கனிவான பார்வைக்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. பெரியண்ணன் அரசு அவர்கள்.*

திரு. பெரியண்ணன் அரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 6 ஆண்டுகளுக்கு முன்பு புதுக்கோட்டை ஊராட்சி என்பது புதுக்கோட்டை நகராட்சியோடு இணைக்கப்பட்டது. இன்றைக்கு 5 வார்டுகள் அந்தப் பகுதியில் உள்ளன. இதுவன்றி, காமராஜபுரம் பகுதியிலே 4 வார்டுகள் உள்ளன. இந்தப் பகுதியிலே காவேரி குடிதண்ணீர் கிடைக்கவில்லை. ***

** *மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வி நேரத்தில் குற்றச்சாட்டு சொல்லாமல் கேளுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அது அவைக்குறிப்பில் இருந்து நீக்கப்படுகிறது. அந்தக் கேள்விக்கு மட்டும் பதில் சொல்லுங்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், கடந்த 5 ஆண்டுக் காலத்திலே, சரித்திர சாதனையாக எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு 21,478 கோடியே 18 இலட்சம் ரூபாயை குடிநீருக்கான திட்டங்களுக்கு ஒதுக்கி, அற்புதமான திட்டங்களை எல்லாம் கொடுத்துள்ளார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பகுதிகளில் ஆய்வு செய்யப்படும். அவர் தவறான ஒரு குற்றச்சாட்டு சொல்லியிருக்கிறார். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், எந்தெந்த கிராமங்களில், பேரூராட்சிகளில், நகராட்சிகளில், மாநகராட்சிகளில் எங்கெங்கே குடிநீர்ப் பற்றாக்குறை இருக்கிறது என்பதைக் கண்டறிந்து, தேவையின் அடிப்படையில் இந்த 5 ஆண்டுக் காலத்திலே எல்லாவற்றையும் சரிசெய்துள்ளார்கள். அப்படி மாண்புமிகு உறுப்பினர் சொன்ன அந்தப் பகுதிகளிலே விடுபட்டிருந்தால், கண்டிப்பாக ஆய்வு செய்யப்பட்டு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு சென்று நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. பாண்டியன் அவர்கள்.

திரு. கே.ஏ. பாண்டியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தாயை வணங்குகின்றேன்; தமிழ்த்தாயை வணங்குகிறேன். எங்கள் நாடி, நரம்புகளில் ஓடுகின்ற இரத்தத்துளிகளில் எல்லாம் உறைந்து கிடக்கின்ற தாயே, தமிழே (மேசையைத் தட்டும் ஒலி) உங்களை வணங்குகின்றேன். "சங்கே முழங்கு" என முழக்கமிட வைத்த சங்கத் தமிழ் வளர்க்கும் எங்கள் சந்தியா தாய் ஈன்றெடுத்த சரித்திரப் புகழே, உங்களை வணங்குகின்றேன். கடைகோடி தொண்டனுக்கும் அரியாசனம்

2016 ஆகஸ்ட் 8]

தந்து அழகு பார்க்கின்ற அன்னைத் தமிழை வணங்குகின்றேன். மூலையில் கிடந்தோர்களுக்கெல்லாம் முகவரி தந்த எங்கள் முத்தமிழ் தாயை, உயிர் மூச்சென வணங்குகின்றேன். தியாகத்தில் மலர்ந்த அம்மா! தீந்தமிழைக் காக்கும் அம்மா! சட்டமன்றம் உள்ளேயும், சங்கநாதம் முழங்கும் அம்மா! சாதனைகள் பல செய்து சரித்திரத்தில் நிலைத்த அம்மா! இலட்சியத்தில் உறுதி என்னும் முத்திரையாம் நமது அம்மா!

முற்பகல் 10–25

35 ஆண்டுக் காலமாக தொண்டனாக இருந்த என்னை, கிளைக் கழகத்தினுடைய செயலாளராக, ஒன்றிய அம்மா பேரவையினுடைய அவைத் தலைவராக, இரண்டு முறை கடலூர் மேற்கு மாவட்டக் கழகத்தினுடைய பொருளாளராக, தொடர்ச்சியாய் மூன்று முறை இன்றுவரை குமராட்சி ஒன்றியக் கழகத்தினுடைய செயலாளராக, குமராட்சி ஊராட்சி மன்றத்தினுடைய தலைவராக, குமராட்சி ஊராட்சி ஒன்றியக் குழுப் பெருந்தலைவராக, எனக்குப் பார்வையில் ஞானம் காட்டி, உயர்விலே கருணை காட்டி, உயர்வினைத் தந்த தாயே! 'சேற்றிலே கால் வைத்தால்தான் சோற்றிலே கை வைக்க முடியும்' என்ற பெருமைக்கு உள்ளான உழவர் குடும்பத்திலே பிறந்த இந்த உழவர் மகனை, கழகத்தின் சார்பில் சிதம்பரம் தொகுதி சட்டமன்ற வேட்பாளராக்கி, சுட்டெரிக்கும் வெயிலிலும் எனக்குத் தேர்தல் பரப்புரை செய்து, என்னைக் கழகத்தின் சட்டமன்ற உறுப்பினராக்கி அழகு பார்க்கும் அன்னைத் தமிழகத்தின் காவல் தெய்வமே! தங்களின் புனித பொற்பாதங்களில் நானும், எனது குடும்பமும் காலம் உள்ளவரை, உடலிலே உயிர் உள்ளவரை விசுவாசமாக இருப்போம் அம்மா! எனக்கு வாக்களித்து, வரலாற்றுச் சிறப்புமிக்க இந்த மாமன்றத்திற்கு அனுப்பிவைத்த என்னுடைய மரியாதைக்குரிய சிதம்பரம் தொகுதியினுடைய வாக்காளப் பெருமக்களுக்கு என்னுடைய கோடானுகோடி நன்றியினை இந்த மாமன்றத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதிக்குட்பட்ட பரங்கிப்பேட்டை ஊராட்சி ஒன்றியம், புதுக்குப்பம் கிராமத்தில் செயல்பட்டு வந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கடந்த சுனாமி பேரழிவின்போது பழுதடைந்துவிட்டது. இப்போது பொது மக்களின் குடிநீர்த் தேவையைப் பூர்த்தி செய்யும்வகையில், சுமார் 1 இலட்சம் லிட்டர் கொள்ளளவு

கொண்ட நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றினைக் கட்டித் தர மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு முன்வருமா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலூர் மாவட்டம், சிதம்பரம் தொகுதிக்குட்பட்ட புதுக்குப்பம் கிராமத்திலே மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்று பழுதடைந்துவிட்டதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறினார். நீர்த்தேக்கத் தொட்டியின் பழுதை நீக்கம் செய்ய வேண்டுமா அல்லது புதிய நீர்த்தேக்கத் தொட்டி கட்டப்பட வேண்டுமா என்பது அதிகாரிகளால் ஆய்வு செய்யப்பட்டு, கண்டிப்பாக மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய மேலான கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. எ. ராமர் அவர்கள்.*

திரு. எ. ராமர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகமெல்லாம் போற்றும் ஒப்பற்ற எங்கள் தலைவர், 1957 ஆம் ஆண்டு நின்று, வென்ற தொகுதியில், சட்டமன்ற உறுப்பினராவதற்கு எனக்கு வாய்ப்பளித்த தலைவர் அவர்களையும், நமக்கு நாமே நடைப்பயணத்தின் நாயகனான எதிர்க்கட்சித் தலைவர் அவர்களையும், எனக்கு வாக்களித்து வெற்றி பெறச் செய்த குளித்தலை தொகுதி மக்களையும் வணங்குகிறேன்.

குளித்தலை தொகுதி, தோகைமலை ஒன்றியம், புத்தூர் கிராமம், உப்புக்காய்ச்சிப்பட்டியில் 20 ஆயிரம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி ஒன்றினை அமைக்க அரசு ஆவன செய்ய வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

2016 ஆகஸ்ட் 8]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சி, சிறப்புத் திட்டங்கள் செயலாக்கத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. எஸ்.பி. வேலுமணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் கோரிக்கை குறித்து துறை அதிகாரிகளுடன் ஆய்வு செய்து, அங்கு மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டவேண்டிய அவசியமிருப்பின், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு செல்லப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இரா. மாசிலாமணி, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

33—

மேம்படுத்துதல்

***1315—டாக்டர் இரா. மாசிலாமணி:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மைலம் தொகுதி, மைலம் ஒன்றியம், முப்புளியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையத்தை மேம்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) ஒவ்வோர் ஊராட்சி ஒன்றியத்திலும் ஓர் ஆரம்ப சுகாதார நிலையம் தரம் உயர்த்தப்பட வேண்டும் என்ற நியதியில் அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் தரம் உயர்த்தப்பட்டு வருகின்றன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்ட முப்புளி கூடுதல் ஆரம்ப சுகாதார நிலையம், மைலம் ஊராட்சி ஒன்றியத்தினைச் சார்ந்தது. ஏற்கெனவே மைலம் ஊராட்சி ஒன்றியத்திலும், மைலம் ஆரம்ப சுகாதார நிலையம் 30 படுக்கைகள் கொண்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையமாகத்